1st Proof


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2459/22 - 2025 ඔක්තෝබර් මස 22 වැනි බදාදා - 2025.10.22

2459/22 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேர்தல் மாவட்ட இலக்கம் 18 - பொலன்னறுவை

மேற்குறிப்பிடப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்காக 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 9(3) ஆம் உப பிரிவின் கீழ் 2021 ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதிய 2225/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியுடன் தொடர்புடைய அறிவித்தல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. அந்த வர்த்தமானியில் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "மேற்குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ள 1757/18 ஆம் இலக்க மற்றும் 2012.05.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கமைய பிரித்தொதுக்கப்பட்ட "இ" எழுத்தைக் கொண்ட வாக்கெடுப்புப் பிரிவு மீண்டும் பிரித்தொதுக்கப்பட்டுள்ளதெனவும்" எனும் வசனங்களுக்குப் பதிலாக "மேற்குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ள 1757/18 ஆம் இலக்க மற்றும் 2012.05.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கமைய பிரித்தொதுக்கப்பட்ட "ஆ" எழுத்தைக் கொண்ட வாக்கெடுப்புப் பிரிவு மீண்டும் பிரித்தொதுக்கப்பட்டுள்ளதெனவும்" எனும் வசனங்களை பதிலீடு செய்வதன் மூலம் மற்றும் அந்த அட்டவணையில் "வாக்கெடுப்புப் பிரிவு "இ" - "பொலன்னறுவை" என்ற வசனத்திற்குப் பதிலாக "வாக்கெடுப்புப் பிரிவு "ஆ" மெதிரிகிரிய" என்ற வசனங்களை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தம் செய்யப்பட வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2021 ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மனோஜி ரீ. குருசிங்க,**
உதவிப் பதிவு அலுவலர்,
தேர்தல் மாவட்ட இலக்கம்
18- பொலன்னறுவை.

தேர்தல்கள் அலுவலகம்,
பொலன்னறுவை,
2025, ஒற்றோபர் 22.

EOG 10 - 0224


1A - G 45651— 38 (2025/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*